முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.49/2010**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 27.03.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 27.03.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சிவக்குமார் | வயது.. | 55 |
| தந்தை பெயர்.. | நவநீதகிருஷ்ணன் | ஊர் .. | தீத்தாம்பாளையம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ..**

1. இந்த வழக்கை நான் செயலாளர் என்று முறையில் தாக்கல் செய்திருககிறேன். தற்போது எனது மனைவிசெயலாளராக பதவி வகிக்கிறார். இந்த வழக்கின் புல எண்.36/2 அதன் மொத்த விஸ்திரணம் 1 ஏக்கர் 12 சென்ட். வழக்கில் பரிகாரம் முழுமையான 1 ஏக்கர் 12 சென்ட் -க்கு தான் கேட்டிருக்கிறேன். வழக்கு சொத்தின் சக்குபந்தி கிழக்கில் ரோடு, வடக்கில் நிலம், தெற்கில் ரோடு, மேற்கில் கோவில் உள்ளது. பிராதில் சொத்து அட்டவணையில் சக்குபந்தியில் அவ்வாறு சொல்லியிருக்கிறேன். தற்போது சாட்சியம் அளித்த சக்குபந்திக்கம், பிராதில் உள்ள சக்குபந்தியில் வித்தியாசம் இருந்தால் தாற்போது நான் சாட்சியம் அளித்தது தான் சரியானதா என்றால் மீண்டும் சாட்சி தற்போது கிழக்கில் வீடுகள் இருக்கிறது வீடுகளுக்கு அருகாமையில் ரோடு உள்ளது என்று கூறுகிறார். நான் தற்போது பள்ளி compound -க்குள் இருக்கும் வீட்டில் வசிக்கிறேன். நான் வசிக்கும் வீடு ஏற்கனவே என் தாத்தா வால் கட்டப்பட்டது ஆகும்.

2. நான் தற்போது தாத்தாவால் கட்டப்பட்ட வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆதாரமாக ஆவணங்களான குடும்ப அட்டை, ஆதார் அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை., கையில் வைத்திருக்கிறேன். நான் வசிக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது, EB bill கட்டிவருகிறேன், EB bill வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் கொடுத்திருக்கிறேன். EB bill

எத்தனையாவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. EB bill தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வசிக்கும் வீட்டின் EB connection எண்.4384, நான் வசிக்கும் வீட்டிற்கு வீட்டு வரி செலுத்திவருகிறேன். வீட்டு வரி ரசீது நீதிமன்றத்தில்தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஞாபகம் இல்லை.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.